**கவனிக்க.**- *2019.07.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2133 - 2019 ජූලි මස 19 වැනි සිකුරාදා - 2019.07.19

*2133 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1260 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1269 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | 1284 |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-(i) *மரண தண்டனையை இல்லாதொழித்தல் சட்ட மூலம் 2019, யூலை மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *கால விதிப்பு (திருத்தம்) சட்டமூலம் 2019, யூலை மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2019, ஓகத்து மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூலை 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

*நீர்கொழும்பு மாநகர சபை*

**மேல் மாகாண அரசாங்க சேவையில் பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு**

*நீர்கொழும்பு மாநகர சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள தீயணைப்புப் படைவீரர், நூல் நிலைய உதவியாளர், சாரதி, அலுவலக அலுவல்கள் உதவியாளர், காவலாளி, சுகாதாரத் தொழிலாளி, வேலை/வெளிக்களத் தொழிலாளி ஆகிய பதவிகளுக்காக திறந்த ஆட்சேர்ப்பு செய்வதற்காக உரிய தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*விண்ணப்பதாரிகள் இதன் கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து "மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு" எனும் முகவரிக்கு 2019.08.19 ஆந் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

| தொ. இல. | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தரம் | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|---|
| 01. | தீயணைப்புப் படைவீரர் | 02 | - | RS1 -2016 (அ.சே.சு.நி. 3/2016 இற்கு ஏற்ப) ரூபா 29,540.00-7 x 300- 27 x 370 ரூபா 41,630.00 எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூ. 29,540.00, 4 ஆம் சம்பளப் படி ஏற்றத்தினைப் பெறுவதற்கு முன்னர் வினைத்திறன்காண் தடை தாண்டலுண்டு. |
| 02. | நூல் நிலைய உதவியாளர் | 01 | III | PL -1-2016 (அ.சே.சு.நி. 3/2016 இற்கு ஏற்ப) ரூபா 24,250.00-10 x 250-10 x 270-10 x 300-12 x 330 ரூபா 36,410.00 எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூ. 24,250.00, 4 ஆம் சம்பளப் படி ஏற்றத்தினைப் பெறுவதற்கு முன்னர் வினைத்திறன்காண் தடை தாண்டலுண்டு. |
| 03. | சாரதி | 04 | III | PL -3-2016 (அ.சே.சு.நி. 3/2016 இற்கு ஏற்ப) ரூபா 25,790.00-10 x 270-10 x 300-10 x 330-12 x 350 ரூபா 38,990.00 எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூ. 25,790.00, 4 ஆம் சம்பளப் படி ஏற்றத்தினைப் பெறுவதற்கு முன்னர் வினைத்திறன்காண் தடை தாண்டலுண்டு. |
| 04. | அலுவலக அலுவல்கள் உதவியாளர் | 01 | III | PL -1-2016 (அ.சே.சு.நி. 3/2016 இற்கு ஏற்ப) ரூபா 24,250.00-10 x 250-10 x 270-10 x 300-12 x 330 ரூபா 36,410.00 எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூ. 24,250.00, |
| 05. | காவலாளி | 01 | III | 4 ஆம் சம்பளப் படி ஏற்றத்தினைப் பெறுவதற்கு முன்னர் வினைத்திறன்காண் தடை தாண்டலுண்டு. |

| தொ. இல. | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | தரம் | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|---|
| 06. | சுகாதாரத் தொழிலாளி | 04 | III | PL -1-2016 (அ.சே.சு.நி. 3/2016 இற்கு ஏற்ப) ரூபா 24,250.00-10 x 250-10 x 270-10 x 300-12 x 330 ரூபா 36,410.00 எனும் சம்பள அளவுத் திட்டத்தின் அடிப்படைச் சம்பளம் ரூ. 24,250.00, 4 ஆம் சம்பளப் படி ஏற்றத்தினைப் பெறுவதற்கு முன்னர் வினைத்திறமைக்காண் தடை தாண்டலுண்டு. |
| 07. | வேலை/வெளிக் களத் தொழிலாளி | 01 | III | |

01. **தீயணைப்புப் படைவீரர் பதவிக்காக தேவையான தகைமைகள் :**

சேவை வகுதி : ஒழுங்கு முறை சேவை

கல்வித் தகைமைகள் : ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சா.த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டியதோடு அச் சந்தர்ப்பத்தில் அல்லது மற்றுமொரு வேறொரு சந்தர்ப்பத்தில் விஞ்ஞானம் மற்றும் ஆங்கில மொழிப் பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உடற்தகைமைகள் :**

(i) 162 செ. மீ. இற்கு குறையாத உயரம் மற்றும் உயிரி நிறைச்சுட்டி உரிய நியம முறையில் இருத்தல் வேண்டும். (உயிரி-நிறைச்சுட்டி 18.5 இலிருந்து 24 வரை இருத்தல் வேண்டும்.)

(ii) அனைத்து விண்ணப்பதாரிகளும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவான உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் அவசியமாகும்.

(iii) கண்பார்வை தொடர்பான தேவைகள் - மூக்குக் கண்ணாடியின்றி அல்லது தொடுகை வில்லையின்றி கண்பார்வை குறைந்த பட்சம் 6/6 மற்றும் 6/12 இடையிலும் வர்ணங்கள் பற்றிய பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும்.

(iv) செயற்கையான உடல் மாற்றங்கள் செய்யப்படாதிருத்தல் வேண்டும். (உதாரணம்- பச்சை குத்துதல் போன்றவை.)

**வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று மேல் மாகாணத்தில் குறைந்தளவில் மூன்று (03) வருட காலம் தொடர்ச்சியாக நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;

(iii) திருமணமாகாத ஆணாக இருத்தல் வேண்டும்;

(iv) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டியதோடு சட்ட விரோத செயற்பாடுகளில் தொடர்பில்லாத ஒருவராக இருக்க வேண்டியதோடு இதனை பொலிஸ் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்;

(v) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டுமென விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்கு அந்தத் தகைமைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**வயது :**

குறைந்த வயதெல்லை : 18 இற்குக் குறையாமல்

உச்சவயதெல்லை : 24 வருடங்களுக்கு மேற்படாமல்

**ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

(i) எழுத்து மூலம் பரீட்சை மற்றும் தொழிற்சார் (செய்முறை) பரீட்சையில் பெறும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் வெற்றிடங்களுக்காக பயிலுநர் தீயணைப்பு படை வீரர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்;

(ii) பயிற்சியை ஆரம்பிக்க முன்னர் அனைத்து பயிலுநர்களும் உடல், உள ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்;

(iii) வெற்றிடங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஒரு வருட கால பயிற்சிப்பாட நெறியொன்றை பயில வேண்டும். பயிற்சிக் காலத்தில் மகிழ்ச்சிகரமான வேலை மற்றும் நடத்தையைக் கொண்டிராத அல்லது எதிர்பார்க்கப்படும் தொழில் தரத்தை அடைய முடியாத பயிலுநர் தீயணைப்பு படை வீரர்களை எதுவித நட்டஈடும் இன்றி பயிற்சியில் இருந்து நீக்கும் அதிகாரம் நியமிக்கும் அதிகாரிக்கு உண்டு .

(iv) பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்கின்ற பயிலுநர் தீயணைப்பு படை வீரர்கள் தீயணைப்பு படைவீரர் பதவியில் நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் பயிற்சிக் காலம் நிரந்தர சேவைக்காலத்திற்குள் கணக்கிடப்படும் என்பதுடன் பயிற்சி பூர்த்தி செய்யப்பட்டு சேவையில் அமர்த்தப்படும் சந்தர்ப்பத்தில் உரிய சம்பள அளவுத் திட்டத்தில் இரண்டாவது படிமுறையில் வைக்கப்படுவார்கள்;

(v) பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 10,000 வழங்கப்படும்: ;

(vi) பயிற்சிக் காலத்தினுள் எந்தவொரு பயிலுநர் தீயணைப்பு படைவீரருக்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(vii) பயிற்சிற்காக தேர்ந்தெடுக்கப்படும் பயிலுநர் தீயணைப்பு படைவீரர்கள் நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் நியமனம் பெற்ற திகதி தொடக்கம் 5 வருட காலம் உரிய உள்ளூராட்சி மன்றத்தில் சேவை புரிவதாக நியமன அதிகாரியுடன் ரூபா 500,000 பெறுமதியான பிணை முறியொன்றில் பயிற்சியை ஆரப்பிக்கும் சந்தர்ப்பத்தில் கைச்சாத்திடல் வேண்டும்;

(viii) பயிலுநரின் விருப்பத்திற்கு அமைய பயிற்சி பெறும் காலத்தினுள் பயிற்சியில் இருந்து வெளியேற கருதும் பட்சத்தில் பயிற்சிக்காக செலவு செய்யப்பட்ட அனைத்து செலவுகளையும் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்;

(ix) தீயணைப்பு படைவீரர் பதவிக்கு நியமனம் பெற்ற நியமனதாரர்கள் உரிய உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் அதிகார எல்லைக்குள் வசிக்குமாறு பணிப்பிக்கப்படலாம்;

**எழுத்து மூலப் பரீட்சை :**

| பாடங்கள் | காலம் | உச்ச புள்ளிகளின் அளவு | சித்தி பெறும் புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை (மொழி அறிவு, தர்க்கத் திறன் மற்றும் கணிதத் திறமைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல், விண்ணப்பதாரியின் அறிவைப் பரீட்சிக்கும் வகையிலும் அத்துடன் பொருளாதார, சமூக, கல்வி, விஞ்ஞான, கலாசார, அரசியல் மற்றும் விளையாட்டுத் துறைக்கு உரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அன்றாட நிகழ்வுகள் தொடர்பான அறிவைப் பரீட்சிக்கும் வகையிலும் அமைந்த பல்தேர்வு வினாப்பத்திரம்.) | 01 மணி | 100 | 40 |

**தொழில்சார் பரீட்சை :**

எழுத்து மூலப் பரீட்சையில் சித்திபெற்ற விண்ணப்பதாரர்களுக்கான தொழில்சார் பரீட்சை (செயன்முறை)

இப் பரிசோதனைகளில் கலந்து கொள்ளும் போது உடற் தகுதி பற்றி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு வைத்தியரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வைத்தியச் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| பாடங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | சித்தி பெறும் புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| **தாங்கிக் கொள்ளும் ஆற்றல்**<br>(i) ஓடுதல் (01 கிலோ மீற்றர் தூரத்தை ஓடுவதற்கு எடுக்கின்ற ஆகக் குறைந்த நேரத்திற்கு ஏற்ப முன்னுரிமை வழங்கல்)<br>(ii) டிப்ஸ் அடித்தல் (சரியாக டிப்ஸ் 25 இனை அடிப்பதற்கு எடுக்கின்ற குறைந்த நேரம்)<br>(iii) பாரம் தூக்கிக் கொண்டு செல்லல் | 60 | 36 |
| **சமநிலை**<br>(i) ஏணி வழியே செல்லல்<br>(ii) கயிற்றினால் இறங்குதல் | 40 | 24 |

**பொதுவான நேர்முகப் பரீட்சை :**
*அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடைபெறும் (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).*

**தொழில் விபரம் :**

(i) *தீ அணைப்பு மற்றும் உயிர் மற்றும் உடைமைகளைக் காப்பாற்றுவதற்கான தேவையான நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல்;*
(ii) *அம்பியூலன்ஸ் வண்டிச் சேவை, தொழில்நுட்ப சேவைகள், தொடர்பாடல் கடமைகள், விஐபி பாதுகாப்பு சேவைகள் மற்றும் தீ தடுப்புக் கடமைகள்;*
(iii) *அவசர அனர்த்தங்கள், அவசரமாக விடுவிப்புச் செய்தல் மற்றும் பல்வேறு மனிதாபிமான தேவைக்கான நடவடிக்கைகள்;*
(iv) *தீ அணைப்பு சேவை செய்யும் இடங்களை நடாத்திக் கொண்டு செல்வதற்காக தேவையான சகல நடவடிக்கைகளும்;*
(v) *சேவையிலுள்ள உயர் அதிகாரிகளினால் ஒதுக்கப்படுகின்ற கடமைகளின் கீழுள்ள சகல கடமைகளும்;*
(vi) *பதவி தொடர்பாக வழங்கப்படுகின்ற திணைக்களக் கட்டளைகளுக்கு ஏற்ப தமது கடமைகளை நிறைவேற்றல்;*
(vii) *நிறுவனத் தலைவரினாலோ அல்லது திணைக்களத் தலைவரினாலோ வழங்கப்படுகின்ற எந்தவொரு கடமைகளையும் நிறைவேற்றல்.*

*02.* **நூல் நிலைய உதவியாளர் பதவிக்காக தேவையான தகைமைகள் :**

*சேவை வகுதி :* *ஆரம்பத் தேர்ச்சி அற்ற.*

*கல்வித் தகைமைகள் :* *க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (குறைந்தது ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)*

*குறிப்பு : ஆட்சேர்ப்புச் செய்கையில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெறாமல் உள்ளவர்கள் இருப்பின் 8 ஆம் தரம் சித்தியடைந்தவர்களில் ஆட்சேர்ப்பு செய்யும் போது பரிசீலனை செய்யப்படும்.*

*உடற் தகைமைகள் :* *அனைத்து விண்ணப்பதாரிகளும் மேல் மாகாண சபையின் எந்தவொரு மாவட்டத்திலும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பதவியின் கடமைகளை அமுல்படுத்த தேவையான உடல்நல மற்றும் மனநல தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.*

*ஆட்சேர்ப்பு முறை :* *கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.*

| *புள்ளிகள் வழங்கப்படும் முக்கியமான தலைப்புக்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை* | *சித்தி பெறும் புள்ளிகள்* |
|---|---|---|
| *ஆட்சேர்ப்பு செய்யும் போது அடிப்படைக் கல்வித் தகைமையாக தரப்பட்டுள்ள க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றுள்ள ஆறு பாடங்களும் மற்றும் இரண்டு திறமைச் சித்திகளுக்கு மேலதிகமான சித்தியினைப் பெற்றுள்ள பாடங்களுக்காக பெற்றுக் கொண்டுள்ள சித்திகளுக்காக இரண்டு (02) பாடங்களில் உச்ச அளவின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.*<br>● *சாதாரண சித்தி - 04 புள்ளிகள்*<br>● *திறமைச் சித்தி - 06 புள்ளிகள்*<br>● *சிறப்புச் சித்தி - 08 புள்ளிகள்*<br>● *அதிசிறப்புச் சித்தி -10 புள்ளிகள்* | *20* | *50%* |
| *சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் நடைமுறை தொடர்பான பொது அறிவு* | *75* | |
| *சிறந்த ஆளுமை (ஊழியரை நேர்முகப்பரீட்சைக்கு முகம் கொடுக்கும் முறையையும், ஏனைய விடயங்களையும் கவனத்தில் எடுத்தல்.)* | *05* | |

*குறிப்பு :* கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறுகின்ற புள்ளிகளில் திறமைகளின் ஒழுங்க முறையின்படி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்படும். சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது எதிர்பார்க்கப்படுகின்ற சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைப் பரிசோதித்தலும் இங்கு இடம்பெறும்.

*வயது :* குறைந்த வயதெல்லை : விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 இற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
உச்சவயதெல்லை : 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

*தொழில் விபரம் :* நூலகத்தினை அழகாகவும் மனதைக் கவரக் கூடிய வகையிலும், நடாத்திச் செல்லக் கூடியவாறாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை உரிய இடத்தில் வைத்தல், வாசகர்களினால் ஒப்படைக்கப்படுகின்ற புத்தகங்களை பொறுப்பேற்றல் மற்றும் அவற்றினை உரிய பொருத்தமான இடத்தில் வைத்தல், நூலகப் பொறுப்பாளருக்கு தேவையான சந்தர்ப்பத்தில் ஒத்துழைத்தல் உதவி வழங்கல்.

**03. சாரதிப் பதவிக்காக தேவையான தகைமைகள் :**

*சேவை வகுதி :* ஆரம்பத் தேர்ச்சி பெற்ற

*கல்வித் தகைமைகள் :* க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி உட்பட இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06)பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (குறைந்தது ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

*குறிப்பு :* குப்பைப் போக்குவரத்து வாகனச் சாரதிப் பதவிக்காக மட்டும் 8 ஆம் தரம் சித்தியெய்திருத்தல் பரிசீலனை செய்யப்படும்.

*தொழிற் தகைமைகள் :*

1. தனியார்/கூலி வண்டிகளும் நகர எடை 24 அந்தர்களுக்கு குறைந்தது ஸ்டேசன்வெகன் வண்டிகள் செலுத்தல் பற்றி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன செலுத்தல் அனுமதிப் பத்தரம் பெற்றிருத்தல் (ஆட்சேர்க்கும் திகதியன்று குறைந்தது 03 வருடத்திற்கு முன் "சீ" மற்றும் "சீ 1" வாகனத் தொகுதியில் அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரப்படி "பீ" தொகுதியில் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.)
2. வீதி ஒழுங்கு விதிமுறை கோவை பற்றி சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

*குறிப்பு :* நிறுவனத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிலவுகின்ற வெற்றிடங்கள் பார வாகனம் செலுத்தும் திறமைக்கு ஏற்ப சாரதிகளில் இருந்து நிரப்புதற்கான சந்தர்ப்பங்களின் போது பார வாகனம் செலுத்துதல் தொடர்பான அனுமதிப்பத்திரம் (நிகர எடை 34 அந்தர் வரையான பாரமற்ற லொரிகளும் மற்றும் பயணிகள் 32 இற்கு குறைவான அளவை கொண்டு செல்லலக்கூடிய பேருந்துகளுக்கான வாகனம் செலுத்துதல் தொடர்பான அனுமதிப்பத்திரம் அதாவது 'ஏ 1' மற்றும் 'சீ 1' தரத்தில் அனுமதிப்பத்திரம் அல்லது வாகன செலுத்துதல் தொடர்பான புதிய அனுமதிப்பத்திரப்படி 'பீ' மற்றும் 'டீ 1 ' தரத்தில் அனுமதிப்பத்திரம் அல்லது நிகர எடை 34 அந்தருக்கு மேலான மோட்டார் வாகனங்களும் பார டிலேலர்களும் பயணிகள் 32 இற்கு மேலான அளவை கொண்டு செல்லக்கூடிய பேருந்துகளுக்கான மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தரம் 'ஏ' கொண்ட அனுமதிப்பத்தரம் அல்லது புதிய அனுமதிப்பத்தரத்தின் படி 'டீ' தரத்தில் அனுமதிப்பத்திரம், அடிப்படைத் தகைமையாக கொள்ளப்படும்.

*அனுபவம்:* அனுமதிப்பத்திரம் கிடைத்த பின் சாரதியாக குறைந்தது மூன்று (03) வருடங்கள் அனுபவம் இருக்க வேண்டும். (அனுபவத்தை ஒரு சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

*உடற் தகைமைகள் :* உயரம் குறைந்தது ஐந்து (5') அடி இருக்க வேண்டும்.
பகல் பொழுதிலும் மற்றும் இராப் பொழுதிலும் பணிபுரிய உடல் ரீதியாக தகுந்த நிலையில் இருக்க வேண்டியதோடு சிறந்த கண் பார்வை உடையோராயும் இருத்தல் வேண்டும். அரசாங்க வைத்தியரால் உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*ஆட்சேர்ப்பு முறை :* தொழிற் பயிற்சியினைப் பரீட்சித்தல் மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் சித்தியடைகின்ற விண்ணப்பதாரிகளில் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**தொழில்சார் பரீட்சை :**

| பாடங்கள் | அதிகூடிய புள்ளிகள் | சித்தி பெறக்கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. வாகனம் ஓட்டுவதிலுள்ள திறமை | 40 | 20 |
| 2. வீதிச் சட்டங்கள் பற்றிய செயன்முறை அறிவு | 40 | 20 |
| 3. மோட்டார் இயந்திர விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 20 | 10 |

மேலே தொழிற் பயிற்சிப் பரீட்சையினை நியமனம் வழங்கும் அதிகாரியினால் நியமிக்கப்படுகின்ற நிறைவேற்று/பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர், மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவர் மற்றும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு உத்தியோகத்தர் அடங்கிய பரிசோதகர் குழுவினால் நடாத்தப்படும்.

**பொதுவான நேர்முகப் பரீட்சை :**

ஆட்சேர்ப்புச் செய்யும் போது அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடைபெறுகின்றது. புள்ளிகள் வழங்கப்படல் இடம் பெறாது.

வயது :

குறைந்த வயதெல்லை : 18 வருடங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

உச்சவயதெல்லை : 45 வருடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : ஏற்கெனவே மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்ள நிரந்தர மற்றும் ஓவ்வூதிய உரித்துடைமை பெற்றுள்ளவர்களுக்காக உயர்ந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.

04, 05 . **அலுவலக அலுவல் உதவியாளர் மற்றும் காவலாளி பதவிகளுக்காக தேவையான தகைமைகள் :**

சேவை வகுதி : ஆரம்பத் தேர்ச்சி அற்ற.

கல்வித் தகைமைகள் : க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06)பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (இதில் குறைந்தது ஐந்து (05) பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)

குறிப்பு : ஆட்சேர்ப்பு செய்கையில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெறாமல் உள்ளவர்கள் இருப்பின் 8 ஆம் தரம் சித்தியடைந்தவர்களில், ஆட்சேர்ப்பு செய்யும் போது பரிசீலனை செய்யப்படும்.

உடற் தகைமைகள் : பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான உடல் நல மற்றும் மனநல தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு முறை : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கியமான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தி பெறும் புள்ளிகள் |
|---|---|---|
| ஆட்சேர்ப்பு செய்யும் போது அடிப்படை கல்வித் தகைமையாக தரப்பட்டுள்ள க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றுள்ள ஆறு (06) பாடங்களும் மற்றும் இரண்டு திறமைச் சித்திகளுக்கு மேலதிகமான சித்தியினைப் பெற்றுள்ள பாடங்களுக்காக பெற்றுக் கொண்டுள்ள சித்திகளுக்காக இரண்டு (02) பாடங்களில் உச்ச அளவின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.<br>● சாதாரண சித்தி - 04 புள்ளிகள்<br>● திறமைச் சித்தி - 06 புள்ளிகள்<br>● சிறப்புச் சித்தி - 08 புள்ளிகள்<br>● அதிசிறப்புச் சித்தி - 10 புள்ளிகள் | 20 | 50% |
| சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் அன்றாடம் நிகழுகின்ற நடைமுறை தொடர்பான பொது அறிவு | 75 | |
| சிறந்த ஆளுமை (ஊழியரை நேர்முகப்பரீட்சைக்கு முகம் கொடுக்கும் முறையையும், ஏனைய விடயங்களையும் கவனத்தில் எடுத்தல்.) | 05 | |

குறிப்பு : தற்பொழுதுள்ள வெற்றிடங்களுக்காக அதி கூடிய புள்ளிகள் பெற்ற வரிசைக்கேற்ப நியமனம் வழங்கப்படுகின்றதோடு, சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படுகின்ற தேவைப்பாடுகளையும் இங்கு பரிசீலிக்கப்படும்.

வயது :

குறைந்த வயதெல்லை : விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்ற வயது 18 இற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

உச்சவயதெல்லை : 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

தொழில் விபரம் : நிறுவனத்தில் உள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு மற்றும் அவற்றினை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கும் மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற இலக்கை அடைவதற்காகவும் தேவையான உதவிகளை வழங்கல்.

**06. 07. சுகாதாரத் தொழிலாளி மற்றும் வேலை/வெளிக்களத் தொழிலாளி பதவிகளுக்காக தேவையான தகைமைகள் :**

சேவை வகுதி : ஆரம்பத் தேர்ச்சி அற்ற.

கல்வித் தகைமைகள் : தரம் 08 இல் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உடற் தகைமைகள்: பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் நல மற்றும் மனநல தகுதி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு முறை : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கியமான தலைப்புக்கள் | அதிகூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | தேர்ந்தெடுப்பதற்கு பரிசீலிக்கப்படுகின்ற ஆகக் குறைந்த சித்தி பெறும் புள்ளிகள் |
|---|---|---|
| ஒரு உள்ளூராட்சி நிறுவனத்தில் தற்காலிக, மாற்றீடு, ஒப்பந்த அடிப்படையில் பணி புரிந்திருக்கும் சேவைக்காலம் (ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம்) | 15 | 50% |
| பதவிக்கேற்ப அனுபவம் பற்றி பெற்றுக் கொண்டுள்ள வேறு சான்றிதழ்கள் | 05 | |
| சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் அன்றாடம் நிகழுகின்ற நடைமுறை தொடர்பான பொது அறிவு | 75 | |
| சிறந்த ஆளுமை | 05 | |

குறிப்பு : தற்பொழுதுள்ள வெற்றிடங்களுக்காக அதி கூடிய புள்ளிகள் பெற்ற வரிசைக்கேற்ப நியமனம் வழங்கப்படுகின்றதோடு, நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சிக்கப்படுகின்ற தேவைப்பாடுகளையும் இங்கு பரிசீலிக்கப்படும்.

வயது :

குறைந்த வயதெல்லை : 18 வருடங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

உச்சவயதெல்லை : 45 வருடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

**சகல பதவிகளுக்குமான வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று மேல் மாகாணத்தில் குறைந்தது மூன்று (03) வருட காலம் தொடர்ச்சியாக நிரந்தர வதிவாளர் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும் ;

(iii) நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்;

(iv) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தேவையான அனைத்து தகைமைகளையும் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல்.

**பதவிகளின் தன்மை :** இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது.
**மொழித் திறன் :**

| மொழி | பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய திறமைகள் |
|---|---|
| 1. அரச கரும மொழி | அரச கரும மொழியல்லாத மொழியொன்றில் சேவையில் இணைந்து கொண்ட அலுவலர் ஒருவர் உரிய அரச கருமமொழியில் தேர்ச்சியினை நன்னடத்தைக் கால எல்லையினுள் பெற்றுக் கொள்ளல் அவசியமாகும். |
| 2. மற்றைய அரச கரும மொழி | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 ஆம் இலக்க மற்றும் அதற்கு இடைநேர் சுற்றறிக்கைகளுக்கு அமைய உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| 3. கூட்டணி மொழி (பொருத்தமானதாயின் மட்டும்) | ஏற்புடையதாகாது. |

மேல் மாகாண சபை அரசாங்க சேவை செயன் முறை சட்டக் கோவையில் காட்டப்படுகின்ற பொது நிபந்தனைகளுக்கு மேலதிகமான நிபந்தனைகள்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை நிபந்தனைகளுக்கும் மேல் மாகாண சபையின் நிதிப் பிரமாணக் கோவை நிபந்தனைகளுக்கும் அவ்வவ்போது மேல் மாகாண சபையின் கௌரவ ஆளுநரினால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும் மேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் கட்டளைகளுக்கும் நிறுவனத் தலைவர்களினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகளுக்கும் ஏற்ப கட்டுப்படல் வேண்டும்.

மேல் மாகாண அரசாங்க சேவைகள் சேவைப் பிரமாணக் குறிப்புகளில் காட்டப்படுகின்ற பொருள் கோடல்களுக்கு அப்பாற்பட்டதான விளக்கங்கள் :

மேல் மாகாண அரசாங்க சேவைகள் சேவைப் பிரமாணக் குறிப்புகளில் காட்டப்படுகின்ற பொருள் கோடல்களுக்கு அப்பாற்பட்டதான எந்தவொரு விளக்கங்களும் அது தொடர்பான மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு/மேல் மாகாண கௌரவ ஆளுநருடன் கலந்தாலோசித்து செய்யப்படும்.

மாநகர ஆணையாளர் (அ.பொ.),
மாநகர சபை,
நீர்கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**நீர்கொழும்பு மாநகர சபை**

.......................................................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................

2. முழுப் பெயர் : ..........................................................................................................

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4. நிரந்தர முகவரி : ..........................................................................................................

5. தொலைபேசி இலக்கம் : ..........................................................................................................

6. தபால் முகவரி : ..........................................................................................................

7. நிரந்தர வதிவிட மாவட்டம் : ..........................................................................................................

8. நிரந்தர வதிவிட செயலாளர் பிரிவு : ..........................................................................................................

9. நிரந்தரமாக வசிக்கும் உள்ளூராட்சி நிறுவன அதிகார எல்லைப் பிரதேசம் : ......................................................

10. பிறந்த திகதி : ஆண்டு : ..................... மாதம் : ..................... திகதி : .....................

11. 2019.08.19 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : ........................... மாதங்கள் : ........................... நாட்கள்: ........................

12. கல்வித் தகைமைகள் : (நிழற்படப்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

13. அனுபவங்கள் : நிழற்படப்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

14. தொழில் தகைமைகள் : (நிழற்படப்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

15. ஏனைய தகைமைகள் :

16. நீங்கள் எப்போதேனும் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா என்பது பற்றி : ...........................

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரை உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் நிபந்தனைகளுக்கு அமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யான தகவல்கள் என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவி நீக்கத்திற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

...................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ............................................

***ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரிகளுக்காக நிறுவனத் தலைவரின் சான்றுரை :***

*இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................ இதுவரை இத் திணைக்களத்தில்/நிறுவனத்தில் ............................... ஆக சேவையாற்றுகின்றார். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எந்த விதத்திலும் அல்லது ஒழுக்காற்று தண்டனைகளுக்கு (எச்சரிக்கை விடுத்தல் தவிர்ந்த) உட்படவில்லை எனவும் உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரை செய்கிறேன்/செய்யவில்லை.*

..................................................

*திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.*

*பெயர் :.................................*

*பதவி :.................................*

*திகதி :.................................*

*07-831*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

*மாந்தை கிழக்கு பிரதேச சபை பாண்டியன்குளம்*

***வீதிகளின் பெயர் பிரகடனம்***

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 29.05.2019 ஆந் திகதிய 112 ஆம் இலக்க நிர்வாக கட்டளைக்கு அமைவாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எல்லையினுள் அமைந்துள்ள கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள வீதிகளை இப்பிரதேசசபைக்கு உரித்தான வீதிகள் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.*

*தற்போது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் 24 (2) ஆம் பிரிவின் பிரிவிற்கு அமைவாக மாந்தை கிழக்கு பிரதேசசபையினால் இனங்காணப்பட்டுள்ள அவ்வீதிகளின் காணிகளில் சொந்தம் பாராட்டக்கூடியவர் எவராவது இருப்பின் அவர் தமது உரிமையை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களுடன் உரிய ஆட்சேபனைகளை வர்த்தமானியில். அறிவித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள் எமக்கு விணணப்பிக்கலாம். அல்லது அவருக்குள்ள உரித்தை நிலைநாட்டுவதற்காக மாந்தை கிழக்கு பிரதேசசபைக்கு ஒரு மாத முன்னறிவித்தலுடன் வர்த்தமானியில் அறிவித்த திகதியிலிருந்து மூன்று மாத காலத்தினுள் பொருத்தமான நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்தல் வேண்டும் உன இத்தால் பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.*

எம். தயாநந்தன்,
தவிசாளர்,
மாந்தை கிழக்கு பிரதேசசபை.

**முல்லைத்தீவு மாவட்டம்**

மாந்தை கிழக்கு பிரதேசசபை

| தொ. இல. | வீதியின் இல. | வீதிகளின் பெயர் | கி. அ. பிரிவு | கி. அ. பி. இல. | வீதி ஆரம்பம் | வீதி முடிவு | வீதியின் நீளம்(m) | வீதியின் அகலம் (m) | வட்டாரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | NMUEE 001 | வன்னிவிளாங்குளம் 1 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | வீ.அ.அ. வீதி | 705 | 4 | 6 |
| 2 | NMUEE 002 | வன்னிவிளாங்குளம் 2 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | துவரங்குளம் வீதி | 1240 | 4 | 6 |
| 3 | NMUEE 003 | வன்னிவிளாங்குளம் 3 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | காடு | 960 | 4 | 6 |
| 4 | NMUEE 004 | வன்னிவிளாங்குளம் 4 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | காடு | 560 | 4 | 6 |
| 5 | NMUEE 005 | வன்னி துவரங்குளம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வன்னிவிளாங்குளம் 1 ஆம் வீதி | குளம் | 1400 | 4 | 6 |
| 6 | NMUEE 006 | வன்னிவிளாங்குளம் 1 ஆம் ஒழுங்கை | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | வீடு | 95 | 4 | 6 |
| 7 | NMUEE 007 | வன்னிவிளாங்குளம் 2 ஆம் ஒழுங்கை | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வன்னிவிளாங்குளம் 3 ஆம் வீதி | துவரங்குளம் வீதி | 457 | 4 | 6 |
| 8 | NMUEE 008 | வன்னிவிளாங்குளம் 3 ஆம் ஒழுங்கை | வன்னிவிளாங்குளம் | முல் 01 | துவரங்குளம் வீதி | காடு | 200 | 4 | 6 |
| 9 | NMUEE 009 | வன்னிவிளாங்குளம் 4 ஆம் ஒழுங்கை | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வன்னிவிளாங்குளம் 2 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் 3 ஆம் வீதி | 186 | 4 | 6 |
| 10 | NMUEE 010 | வன்னிவிளாங்குளம் 5 ஆம் ஒழுங்கை | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வன்னிவிளாங்குளம் 2 ஆம் வீதி | துவரங்குளம் வீதி | 120 | 4 | 6 |
| 11 | NMUEE 011 | வன்னிவிளாங்குளம் 6 ஆம் ஒழுங்கை | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வன்னிவிளாங்குளம் 2 ஆம் வீதி | காடு | 190 | 4 | 6 |
| 12 | NMUEE 012 | வன்னிவிளாங்குளம் 7 ஆம் ஒழுங்கை | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வன்னிவிளாங்குளம் 2 ஆம் வீதி | காடு | 100 | 4 | 6 |
| 13 | NMUEE 013 | வன்னி கல்லிருப்பு வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | கோவில் | 1200 | 4 | 6 |
| 14 | NMUEE 014 | பாலைப்பாணி 1 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | பாலைப்பாணி காடு | 75 | 4 | 6 |
| 15 | NMUEE 015 | பாலைப்பாணி 2 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | வயல் | 70 | 4 | 6 |

**முல்லைத்தீவு மாவட்டம்**

மாந்தை கிழக்கு பிரதேசசபை

| தொ. இல. | வீதியின் இல. | வீதிகளின் பெயர் | கி. அ. பிரிவு | கி. அ. பி. இல. | வீதி ஆரம்பம் | வீதி முடிவு | வீதியின் நீளம்(m) | வீதியின் அகலம் (m) | வட்டாரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | NMUEE 016 | பாலைப்பாணி 3 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | வீடு | 180 | 4 | 6 |
| 17 | NMUEE 017 | பாலைப்பாணி 4 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | வீடு | 80 | 4 | 6 |
| 18 | NMUEE 018 | பாலைப்பாணி 5 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | வீடு | 150 | 4 | 6 |
| 19 | NMUEE 019 | பாலைப்பாணி 6 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | வீடு | 100 | 4 | 6 |
| 20 | NMUEE 020 | பாலைப்பாணி 7 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | பாலைப்பாணி காடு | 100 | 4 | 6 |
| 21 | NMUEE 021 | பாலைப்பாணி 8 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | பாலைப்பாணி காடு | 150 | 4 | 6 |
| 22 | NMUEE 022 | பாலைப்பாணி 9 ஆம் வீதி | வன்னிவிளாங்குளம் | முல் 01 | வீ.அ.அ. வீதி | காணி | 150 | 4 | 6 |
| 23 | NMUEE 023 | அம்பாள்புரம் 1 ஆம் வீதி | அம்பாள் புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | வீ.அ.அ. வீதி | 915 | 4 | 5 |
| 24 | NMUEE 024 | அம்பாள்புரம் 2 ஆம் வீதி | அம்பாள் புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | காடு | 50 | 4 | 5 |
| 25 | NMUEE 025 | அம்பாள்புரம் 3 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | காடு | 200 | 4 | 5 |
| 26 | NMUEE 026 | அம்பாள்புரம் 4 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | காடு | 820 | 4 | 5 |
| 27 | NMUEE 027 | அம்பாள்புரம் 5 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | காடு | 325 | 4 | 5 |
| 28 | NMUEE 028 | அம்பாள்புரம் 6 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | காடு | 150 | 4 | 5 |
| 29 | NMUEE 029 | அம்பாள்புரம் 7 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | காடு | 290 | 4 | 5 |
| 30 | NMUEE 030 | அம்பாள்புரம் 8 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | காடு | 193 | 4 | 5 |
| 31 | NMUEE 031 | அம்பாள்புரம் 9 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | குளம் | 950 | 4 | 5 |
| 32 | NMUEE 032 | அம்பாள்புரம் 10 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | காடு | 700 | 4 | 5 |
| 33 | NMUEE 033 | அம்பாள்புரம் 11 ஆம் வீதி | அம்பாள்புரம் | முல் 02 | வீ.அ.அ. வீதி | அம்பாள்புரம் 9 ஆம் வீதி | 775 | 4 | 5 |
| 34 | NMUEE 034 | அம்பாள்புரம் 1 ஆம் ஒழுங்கை | அம்பாள்புரம் | முல் 02 | அம்பாள்புரம் 1 ஆம் வீதி | காடு | 588 | 4 | 5 |
| 35 | NMUEE 035 | அம்பாள்புரம் 2 ஆம் ஒழுங்கை | அம்பாள்புரம் | முல் 02 | அம்பாள்புரம் 1 ஆம் வீதி | அம்பாள்புரம் 1 ஆம் ஒழுங்கை | 360 | 4 | 5 |
| 36 | NMUEE 036 | அம்பாள்புரம் 3 ஆம் ஒழுங்கை | அம்பாள்புரம் | முல் 02 | அம்பாள்புரம் 1 ஆம் ஒழுங்கை | அம்பாள்புரம் 2 ஆம் ஒழுங்கை | 350 | 4 | 5 |

**முல்லைத்தீவு மாவட்டம்**

மாந்தை கிழக்கு பிரதேசசபை

